8 பாடம்

# விளங்கிக் கொண்டாயா

***கர்த்தருடைய தூதன் பிலிப்புவிடம் பேசினார் என்ற பகுதியை மிராக்ளின் அம்மா வாசித்த போது ஜீவாவுக்கு அது ஆச்சரியமாக இருந்தது. தேவதூதன் நம்மோடு பேசுவாரா என்று கேட்டான். மிராக்ளின் அம்மா சிரித்தவாறே, சொல்ல ஆரம்பித்தார்கள். ஜீவா தனது அப்பா எடிசன் மடியிலிருந்தவாறே கேட்டான்.***

கர்த்தருடைய தூதன் பிலிப்புவிடம், தெற்குநோக்கி, எருசலேமிலிருந்து காசா பட்டணத்துக்குப் போகிற வனாந்தரமார்க்கமாய்ப் போகச் சொன்னார். தூதன் சொன்னபடியே பிலிப்பு எழுந்துபோனார்.

எத்தியோப்பியா தேசத்திலிருந்து ஒரு மனிதர் எருசலேமுக்கு தேவனைத் தொழுது கொள்ள வந்திருந்தார். அவர் எத்தியோப்பிய ராஜ ஸ்திரீயாகிய கந்தாகே என்பவரின் மந்திரியாகவும், பொக்கிஷம் எல்லாவற்றிற்கும் தலைவராயுமிருந்தார். அந்த மனிதர் அவ்வாறு ஊருக்குத் திரும்பும் வழியில் தனது இரதத்தில் உட்கார்ந்து வேதத்தைப் படித்துக் கொண்டிருந்தார். வேதாகமத்தில் ஏசாயா தீர்க்கதரிசியின் புத்தகத்தைப் படித்துக்கொண்டிருந்தார்.



அப்போது ஆவியானவர் பிலிப்புவிடம், ‘‘நீ போய் அந்த இரதத்துடனே சேர்ந்துகொள்’’ என்றார். இதுவரையிலும் அமைதியாக இதைக் கேட்டுக் கொண்டிருந்த ஜீவா, ‘‘ஏம்மா? ஆவியானவர் அப்படிச் சொன்னார் என்று கேட்டான். மிராக்ளின் அம்மாவும் இதோ சொல்கிறேன் என்று சொல்லிக் கதையைத் தொடர்ந்தார்கள்.

ஆவியானவர் சொன்னபடியே பிலிப்புவும் ஓடிப்போய் இரதத்தில் ஏறிக்கொண்டார். இரதம்

## மனன வசனம்

**கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக்குறித்து நான் வெட்கப்படேன். இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவபெலனாயிருக்கிறது.**

**ரோமர் 1:16.**

தொடர்ந்து சென்று கொண்டிருந்தது. மந்திரியும் தொடர்ந்து ஏசாயா தீர்க்கதரிசி எழுதிய ஏசாயா 53 – ம் அதிகாரத்தைக் கருத்தாகவும் கவனமாகவும் சத்தமாகவும் படித்துக்கொண்டே இருந்தார்.

அப்போது பிலிப்பு அவரிடம், ‘‘மந்திரியாரே நீர் வாசிக்கும் வசனங்களின் கருத்து என்னவென்று உமக்குத் தெரியுமா?’’ என்று கேட்டார். அதற்கு மந்திரி ‘‘எனக்கு அதை விளக்கிச் சொன்னால்தானே தெரியும்’’ என்றார்.

‘அவர் அடிக்கப்படும்படி கொண்டுபோகப்படுகிற ஒரு ஆட்டுக்குட்டியைப் போலவும், தன்னை மயிர் கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டைப் போலவும் அவர் தம்முடைய வாயைத் திறவாதிருந்தார்’ என்ற பகுதியைத் தான் மந்திரி வாசித்துக்கொண்டிருந்தார்.

இப்பகுதியில் ஆட்டுக்குட்டியைப்போல என்று யார் படப்போகிற பாடுகளைப்பற்றிச் சொல் கிறார் தீர்க்கதரிசி? தன்னைக் குறித்தா அல்லது யாரைக் குறித்து எனக்குச் சொல்லும் என்று கேட்டுக்கொண்டார் மந்திரி.

அப்போது பிலிப்பு நம் இரட்சகர் இயேசுவைக்குறித்து அருமையாகப் பேசினார். நன்றாக விளக்கமாகப் பேசி னார். மந்திரிக்கு இயேசுவைப் பற்றி இப்போது நன்றாகப் புரிந்தது. ஞானஸ்நானம் எடுக்கும்போது நாம் தேவனோடுஉடன்படிக்கை செய்கிறோம்என்றார்பிலிப்பு.

அவ்வாறு மந்திரிக்கு இயேசுவைப்பற்றிச் சொல்லிக் கொண்டே வரும்போது தண்ணீர் நிறைந்து இருந்த ஓரிடத்தை மந்திரி பார்த்தார். உடனேயே ஞானஸ்நானம் பெற ஆசைப்பட்டார். அங்கே



## செய்தி

**மற்றவர்களுக்கு நாம் வேதத்தைக் கற்பிக்கும்போது நாம் தேவனுக்குச் சேவைசெய்கிறோம்.**

தண்ணீர் மிகுதியாக இருந்தது. எனவே பிலிப்புவும் மந்திரிக்கு ஞானஸ்நானம் கொடுத்தார்.

தண்ணீரிலிருந்து இருவரும் கரையேறினபின் பிலிப்புவைக் காணவில்லை என்றபோது ஜீவா குழப்பமாகப் பார்க்க, அவனுடைய அம்மா புன்சிரிப்புடன் ‘‘ஆம்! ஆனால், நீ நினைக்கிறபடி பிலிப்பு தொலைந்துவிடவில்லை. ஆவியானவர் அவரை வேறிடத்துக்கு எடுத்துச் சென்றுவிட்டார். மந்திரியும்இயேசுதேவனைப் பற்றி அறிந்துகொண்டமகிழ்ச்சியுடனே பயணித்தார்’’ என்று சொன்னார்.

‘‘அப்பா, என்னையும் தேவன் பயன்படுத்துவாரா ?’’ எனக்கேட்ட ஜீவாவை அவனுடைய அப்பா, ‘‘நிச்சயம்’’ எனக் கூறி அணைத்துக் கொண்டார். என் கண்ணே! நீ?

### செய்முறை:

*ஏசாயா 53-ஆம் அதிகாரத்தை எத்தியோப்பிய மந்திரிக்கு பிலிப்பு விளக்கியபோது, அந்த மந்திரி தன்னை எதற்கு ஒப்படைத்தார் என்பதைக் கண்டறிய, புள்ளிகளை ஒன்றோடொன்று இணை. பின் இருவர் படத்திற்கும் வண்ணமிடு.*

## புதிர் 8

